ADROIT
ADROIT PUBLIC RELATIONS PVT. LTD.
No. 5, Damodara Mudali Street,
Chetput, Chennai - 600 031, India
Phone : 044-28362166, 28362543

| Publication | Dina Thanthi |
|---|---|
| Date | 07.03.2019 |
| Edition | Tamil Nadu |
| Page No | 14 |

# சென்னையில், சர்வதேச பொறியியல் கண்காட்சி

## 3 நாட்கள் நடக்கிறது

சென்னை, மார்ச்.7– சென்னையில் 3 நாட்கள் சர்வதேச பொறியியல் செயலாக்க கண்காட்சி நடைபெறுகிறது. இதில், ரூ.600 கோடிக்கு வர்த்தக ஒப்பந்தம் ஏற்படும் என்று சிறு, குறு, நடுத்தர தொழில்துறை முதன்மை செயலாளர் கூறினார்.

### சர்வதேச கண்காட்சி

இந்திய பொறியியல் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம், சென்னையில் வருகிற 14–ந் தேதி முதல் 16–ந் தேதி வரை 3 நாட்கள் சர்வதேச பொறியியல் செயலாக்க 8–வது கண்காட்சியை நடத்த உள்ளது. இதுதொடர்பாக தமிழக சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் துறை முதன்மை செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ் நிருபர்களிடம் கூறியதாவது:–

தமிழகத்தில் 3–வது முறையாக இந்த கண்காட்சி நடைபெறுகிறது. இந்த கண்காட்சியில் மொத்தம் 400 அரங்குகள் அமைக்கப்பட உள்ளன. தமிழகத்தில் உள்ள 110 சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள், 130 பெரிய நிறுவனங்கள் கலந்துகொள்கின்றன.

### ரூ.600 கோடிக்கு வர்த்தக ஒப்பந்தம்

இதில், 30 நாடுகளை சேர்ந்த முன்னணி தொழில் நிறுவனங்களும், இந்தியாவில் உள்ள முன்னணி பொறியியல் நிறுவனங்களும் பங்கேற்கின்றன. 60 நாடுகளை சேர்ந்த சுமார் 400 தொழில் முனைவோர், உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் கலந்துகொள்கின்றனர். இந்த கண்காட்சி மூலம் பல்வேறுதொழில்முனைவோர் உருவாக்கப்படுவர்.

சர்வதேச தொழில் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதன் மூலம் இந்தியாவில் உள்ள தொழில்நிறுவனங்கள் வளர்ச்சி அடையும். இந்தியா மற்றும் தமிழகத்தின் தொழில் நிறுவனங்கள் உலக அளவில் வர்த்தகத்தை ஏற்படுத்தி கொள்ளமுடியும். இந்த கண்காட்சியின் தொடர்ச்சியாக ரூ.600 கோடிக்கு வர்த்தக ஒப்பந்தம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### மாணவர்களுக்கு அனுமதி

முதன்முறையாக இந்தியா முழுவதும் உள்ள 40 என்ஜினீயரிங் கல்லூரிகளை சேர்ந்த மாணவ–மாணவிகள் கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் பங்கேற்க அனுமதிக்கப்படுகின்றனர். இதன்மூலம்மாணவ–மாணவிகள் தொழில் முனைவோராகவும், அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவும் வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின் போது இந்திய பொறியியல் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனத்தின் முதுநிலை துணைத்தலைவர் மகேஷ் தேசாய், தென்மண்டல இயக்குனர் சி.எச்.நாடிகர் ஆகியோர் உடன் இருந்தனர்.